## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி. 373/2022

2023 ம் ஆண்டு மே மாதம் 22 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 5 வது நபாின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கணேசன் | வயது | 37 |
| த.பெ.(அ)க.பெ. | தேவராஜ் | தொழில் | இஸ்திரி |
| ஊர்/பணிபுரியுமிடம் | காந்திரபுரம், சிகே ஆசிரமம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>எதிரி ஆஜர்

நான் காந்திபுரம், சிகே ஆசிரமத்தில் வசிக்கிறேன். நான் இஸ்திரி போடும் தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன நாகராஜ் எனக்கு தெரியும். கடந்த 29.03.2022 அன்று மாலை 7.30 மணிக்கு நான் என்னுடைய கடையில் இருந்த சமயம் நாகராஜ் திருப்பத்தூர் டு புதுப்பேட்டை சாலையில் அவரது சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு பின்புறமாக வந்த இருசக்கர வாகனம் நாகராஜ் ஓட்டி வந்த சைக்கிளின் மீது மோதி விட்டது. எனது கடையிலிருந்து சுமார் 3 – 4 மீட்டர் தொலைவில்தான் விபத்து நடந்தது. நான் உடனே சென்று நாகராஜை துாக்கி பார்த்தேன். அவர் மயங்கிய நிலையில் இருந்தார். அருகிலிருந்தவர்கள் ஆம்புலன்ஸிற்கு போன் செய்து வரவழைத்து திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அவர் காக்கி சீருடை அணிந்திருந்தார். ஆஜர் எதிரிதான் சம்பவத்தினத்தன்று மேற்படி விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபர் ஆவார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

விபத்து ஏற்பட்டவுடன் சத்தம் கேட்டுதான் அங்கு சென்று பார்த்தேன் என்றால் இல்லை, நான் அந்த இடத்திலேயேதான் இருந்தேன். என் கடை முன்பாக நின்றிருந்தேனா என்றால் கொஞ்சம் தள்ளியே என் கடை முன்பு நின்றிருந்தேன். நான் செந்தில் கடை முன்பு இருந்தேனா அல்லது மோகன் கடை முன்பு இருந்தேனா என்றால் என் கடை முன்பாக தான் இருந்தேன். அதற்கு சற்று எதிரில்தான் சம்பவம் நடைபெற்றது. என் கடை முன்பாக நடந்த

சம்பவத்திற்காக என்னிடம் போலீஸார் கையெழுத்து வாங்கினார்களா என்றால் கையெழுத்து வாங்கவில்லை. நான்தான் அடிப்பட்ட நபர்களை சென்று தூக்கினேன் என்று சொல்வதை போலீஸாரிடம் சொல்லவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அதை நான் பார்க்கவில்லை என்றாலும் போலீஸார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் தவறான சங்கதிகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை= இல்லை.

**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 373/2022</u>**

2023 ம் ஆண்டு மே மாதம் 22 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 6 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | வயது | 43 |
| த.பெ.(அ)க.பெ. | கோடி | தொழில் | ஓட்டல் கடை |
| ஊர்/பணிபுரியுமிடம் | சிகே ஆசிரமம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை

நான் திருப்பத்தூர் சிகே ஆசிரமத்தில் வசிக்கிறேன். நான் ஓட்டல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். 02.04.2022 அன்று மாலை அதற்கு சில நாட்களுக்கு முன்பாக எனது கடைக்கு அருகில் நடந்த சாலை விபத்தில் ஒருவர் இறந்தது சம்மந்தமாக போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்து என் முன்னிலையில் விசாரித்தும், படம் வரைந்தும் எழுதிக்கொண்டார்கள். நான் அதற்கு சாட்சியாக கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீஸார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

சம்பவம் குறித்து எனக்கு நேரடையாக தெரியாது. போலீஸார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னிடம் ஒரு கையெழுத்துதான் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னுடைய ஓட்டல் கடை அருகே வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் மட்டும் கையெழுத்து போட்டேனா என்றால் என்னுடன் மோகன் என்பவரும் போட்டார். அவரும் என் கடை அருகே நின்றுதான் கையொப்பம் போட்டார் என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை

<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி. 373/2022</u>

2023 ம் ஆண்டு மே மாதம் 22 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 7 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மோகன் | வயது | 58 |
| த.பெ.(அ)க.பெ. | கோவிந்தன் | தொழில் | டெய்லர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | சிகே ஆசிரமம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை

நான் திருப்பத்தூர் சிகே ஆசிரமத்தில் வசிக்கிறேன். நான் சிகே ஆசிரமம், காந்திபுரத்தில் டெய்லர் கடை வைத்துள்ளேன். கடந்த 02.04.2022 அன்று மாலை அதற்கு சில நாட்களுக்கு முன்பாக எனது கடைக்கு அருகில் நடந்த சாலை விபத்தில் ஒருவர் இறந்தது சம்மந்தமாக போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்து என் முன்னிலையையில் விசாரித்தும், படம் வரைந்தும் எழுதிக்கொண்டார்கள். நான் அதற்கு சாட்சியாக கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்பபடும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா. ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** போலீஸார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

சம்பவம் குறித்து எனக்கு நேரடையாக தெரியாது. போலீஸார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னிடம் ஒரு கையெழுத்துதான் வாங்கினார்கள் என்றால் சரிதான். என் கடை அருகே வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான், என் கடையிலிருந்து சம்பவயிடம் 50 அடி துூரம்தான் இருக்கும். வரைபடம் என் கடை அருகே வரைந்தார்களா என்றால் இல்லை சம்பவயிடத்தில் வரைந்தார்கள். நான் வரைபடம் வரைந்ததை பார்க்கவில்லை என்றாலும், போலீஸார் கேட்டதால் என் கடை அருகே வைத்து கையெழுத்து செய்துவிட்டு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை= இல்லை